REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 ஜனவரி 16 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN
தினகரன்

வரு. 89 இல. 14 | January 16,Saturday, 2021 | 16பக்கங்கள் | 30/-

## கொரோனா தொற்று 50,899 பேர் பாதிப்பு

கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 512 பேர், பூரண குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

அதன் பிரகாரம் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து இலங்கையில் மொத்தமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 44,250 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் 06

# 'Park & Ride' பஸ் சேவை ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

கொழும்பு நகரில் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்ட "Park & Ride" பஸ் சேவையின் முதல் கட்டம் கொட்டாவை, மாகும்புர பல்முக போக்குவரத்து மத்திய நிலையத்தை மையப்படுத்தி ஜனாதிபதி கோட்டா



பய ராஜபக்ஷவினால் நேற்று (15) ஆரம்பிக்கப்பட்டது.

கார் மற்றும் மோட்டார் சைக்கிள் பயணிகளுக்கு வசதியான, பாதுகாப்பான பொதுப் போக்குவரத்து பஸ் சேவையை வழங்குவதன் மூலம் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளுக்கு பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கையை குறைப்பதே இதன் நோக்கம். இது சூழல் மாசடைதல், கால விரயம் மற்றும் பயணிகளின் மன அழுத்தத்தை குறைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசனங்களின் எண்ணிக்கைக் கேற்ப பயணிகளை ஏற்றிச் செல்ல சொகுசு பஸ்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. கட்டணம் சாதாரண

### சூழல் மாசடைதல், கால விரயம் மற்றும் பயணிகளின் மன அழுத்தத்தை குறைக்கும் என எதிர்பார்ப்பு

பஸ் கட்டணத்தை விட இருமடங்காகும். குறிப்பிட்ட பஸ் நிலையங்களில் குறைந்த எண்ணிக்கையிலான பயணிகள், குறுகிய நேரத்தில் குறிப்பிட்ட இடத்தை சென்றடைதல், மரியாதையான, நட்பு மற்றும் கவர்ச்சிகரமான போக்குவரத்தை வழங்குதல் ஆகியவை இந்த திட்டத்தில் அடங்கும்.

பயணிகள் தங்கள் வாகனங்களை





பல்முக மத்திய நிலையத்திற்கு சொந்தமான வாகன தரிப்பிடத்தில் இலவசமாக நிறுத்தலாம். திட்டத்தின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டு தரிப்பிட வசதியை விரிவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. காலை 06.00 மணி முதல் 08.00 மணி வரையும், மாலை 04.00 மணி முதல் 00.00 மணி வரையும் ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கு ஒரு முறை பஸ்கள் இயக்கப்படுகின்றன.

காலை 08.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை ஒவ்வொரு 25 நிமிடங்களுக்கு ஒரு தடவை பஸ் சேவை நடைபெறும். ஒரு நாளைக்கு 64 பயணங்கள் மேற்கொள்ளப்படும்.

வாகன ஒழுங்குறுத்துகை, பஸ் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு மற்றும் இலங்கை போக்குவரத்து சபை இணைந்து பொதுப் போக்குவரத்து சேவையை நடைமுறைப்படுத்துகின்றன. 06




உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடு

## மைத்திரி, ரணில், பூஜி
## மீதான விசாரணை ம

அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக 12 மனுக்கள் தாக்கல்

புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்களை தடுக்க முற்படாது போனமைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம





சிங்க, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் 06

## பின் ரஞ்சனின் டங்களுக்கு அவுட்

தெரிவிப்பு

ன விதித்து தீர்ப் ப்பினர் ரஞ்சன் களுக்கு இல்லா வின் தலைவர் பர் நீதி 06



## இந்திய கொரோனா தடுப்பூசி மருந்து மாத இறுதியில் வரும்

அன்பளிப்பாக கிடைக்குமென்கிறார் இராஜாங்க அமைச்சர் –சன்ன ஜயசுமன



இந்தியாவில் தயாரிக்கப்படும் கொரோனா வைரஸ் மருந்தை மாத இறுதியில் இந்தியா, இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்குமிடையிலான நல்லுறவின் அடிப்படையில் இந்தியா, கொரோனா வைரஸ் 06

கிளிநொச்சியில் தொடர் மழை வெள்ளத்தினால்

## 807 குடும்பங்களை சேர்ந்த 2,600 பேர் பாதிப்பு



கிளிநொச்சி குறூப் நிருபர்

தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் (14) வரை 807 குடும்பங்களைச் சேர்ந்த 2,600 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. அத்தோடு பல கிராமங்களில் சில பிரதேசங்கள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதாகவும், போக்குவரத்துக்கள் 06

## TNA வசமிருந்த உப்புவெளி பிரதேச சபை SLPP வசம்

25 வருடங்களின் பின் கைநழுவிச்சென்றது

சுப்பிரமணியம் நிஷாந்தன், திருமலை மாவட்ட விசேட நிருபர்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த 25 வருடகாலமாக உப்புவெளி 'பட்டினமும் சூழலும்' பிரதேச சபையின் அதிகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் இருந்து வந்த நிலையில் முதல்முறையாக 06



## அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலிலும் கோட்டாபயவுக்கே தலைமைத்துவம்

SLPP இளைஞர் மாநாட்டில் அமைச்சர் பந்துல குணவர்தன

சுப்பிரமணியம் நிஷாந்தன்

அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கே நாட்டின் தலைமைத்துவம் வழங்கப்பட வேண்டுமென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்



ளார். ஹோமாகமவில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தன்னிறைவடைந்த பொருளாதாரமொன்றை கட்டியெழுப்புவதே 06

## சுயதனிமைப்படுத்தலில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர்

கொரோனா தொற்றுள்ளவருடன் நெருங்கிப் பழகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் டொக்டர் அனுருத்த பாதெனிய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர், 06



சதொச இரு மோசடி குற்றச்சாட்டுகள்;

## அமைச்சர் ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி



இனி தொடராதென நீதிமன்றம் அறிவிப்பு

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையை இனிமேல் தொடர மாட்டோமென கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2010, 2014 வரை வர்த்தக அமைச்சராக செயற்பட்ட போது ச.தொ.ச நிறுவனத்தின் 153 ஊழியர்களை அவருடைய அரசியல் செயற்பாடுகளில் 06

## நாளுக்கு நாள் மோசமடையும் வடக்கின் கொரோனா நிலைமை

மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன்

வடமாகாணத்தில் புதிய கொரோனா தொற்றாளர்கள் ஒவ்வொரு நாளும் அடையாளம் காணப்படுவதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்



துள்ளார். வடமாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 06

## மாகாண சபை முறைமையை அரசு இரத்து செய்யவுள்ளதாக TNA பொய்ப் பிரசாரம்

தேர்தல் காலவரையறையின்றி தள்ளிப்போனமைக்கு அவர்களே காரணம்



கொவிட்19 வைரஸ் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னர் மாகாண சபை தேர்தல் நிச்சயம் நடத்தப்படுமென சமுர்த்தி, நுண்கடன் மற்றும் அரச தொழில் வழங்கல் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மாகாண சபை முறைமையை அரசாங்கம் இரத்துச் செய்ய முயற்சிப்பதாக தமிழ்த் தேசிய 06